# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, கிராமோதய சபை நிதியம் (திருத்தம்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


2009, நவெம்பர் மாதம் 20 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, கிராமோதய சபை நிதியம் (திருத்தம்) சட்டம்**

[2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 53/2007

**1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கிராமோதய சபை நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, கிராமோதய சபை நிதிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்திற்கான விரிவுப் பெயரைத் திருத்துதல்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க கிராமோதய சபை நிதியச் சட்டத்திற்கான விரிவுப் பெயர், அதன்கண் உள்ள "கிராமோதய சபை நிதியம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஜன திரிய நிதியம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"கிராமோதய சபை நிதியச் சட்டம்" மற்றும் "கிராமோதய சபை நிதியம்" என்பன முறையே "ஜன திரிய நிதியச் சட்டம்" மற்றும் "ஜன திரிய நிதியம்" என அறியப்படுதல்.

**3.** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்திலும் "கிராமோதய சபை நிதியச் சட்டம்" மற்றும் "கிராமோதய சபை நிதியம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே "ஜன திரிய நிதியச் சட்டம்" மற்றும் "ஜன திரிய நிதியம்" என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் ஒழுங்குவிதியில், விதியில், கட்டளையில், அறிவித்தலில், அறிவிப்பில் அல்லது வேறு ஆவணத்தில் "கிராமோதய சபை நிதியச் சட்டம்" மற்றும் "கிராமோதய சபை நிதியம்" என்பவற்றைப் பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் முறையே "ஜன திரிய நிதியச் சட்டம்" மற்றும் "ஜன திரிய நிதியம்" என்பவற்றைப் பற்றிய குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (2) ஆம் உட்பிரிவில் –

(அ) (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :

"(ஆ) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சர் :

ஆயின் எவ்வாறாயினும் சனாதிபதி நிதி அமைச்சராகப் பணியாற்றுமிடத்து, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப் பாகவுள்ள பிரதி அமைச்சருக்கான குறிப்பீடாதல் வேண்டும் ;";

(ஆ) அதன் (ஔ) என்னும் பந்தியில், "வேறு மூன்று ஆட்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வேறு நான்கு ஆட்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அதன் (4) ஆம் உட்பிரிவில், "அதற்கான காரண மொன்றைக் குறிப்பிடாது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(3) அதன் (6) ஆம் உட்பிரிவில், "நான்கு உறுப்பினர்க ளாதல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்து உறுப்பினர்களாதல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவில் "கிராமோதய சபை ஒவ்வொன்றும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப் பட்ட சங்கம் அல்லது நிறுவனம் ஒவ்வொன்றும்" என்னும் சொற்களையும், "பின்வரும் தத்துவங்களை" என்னும் சொற்களிலிருந்து "கொண்டிருப்பதாதல் வேண்டும்." என்பது வரையிலான சொற்களுக்குப் பதிலாக, "பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-" என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும்.

(2) அதன் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் –

"(இ) இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பிலான ஏதேனும் வேலையை மேற்கொள்ளுதல்".

(3) அதற்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :

"பதிவு செய்யப்பட்ட சங்கம் அல்லது நிறுவனத்தின் தத்துவங்கள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, அதன் கண்ணுள்ள "கிராமோதய சபைக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் சங்கத்துக்கு அல்லது நிறுவனத்துக்கு" என்னும் சொற்களையும், "கிராமோதய சபையினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய சங்கத்தினால் அல்லது நிறுவனத்தினால்" என்னும் சொற்களையும் முறையே இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 6அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் ஆறாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவு என்றாற் போன்று பயனுறுதலும் வேண்டும் :

"அங்கீகரிக்கப்பட்ட சங்கம்.

6அ. (1) அமைச்சர் இச்சட்டத்தின் நோக்கத்திற்கு, இலாபமீட்டாத சங்கமொன்றை அல்லது அரசின் சார்பற்ற சங்கமொன்றை அல்லது இலாபமீட்டாத நிறுவகமொன்றை அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றாக அங்கீகரிக்கலாம்.

(2) அமைச்சரானவர், சங்கமொன்று அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றாக இருப்பதற்கு அத்தகைய சங்கத்தால் திருப்திப்படுத்தப்பட வேண்டிய மூலப்பிரமாணத்தை விதித்துரைக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் அப்பிரிவின் (ஈ) மற்றும் (எ) என்னும் பந்திகளில் அதன்கண் காணப்படும் “கிராமோதய சபைக்கு” என்னும் சொற்களுக்குப் பதிலாக “இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் சங்கத்திற்கு அல்லது நிறுவனத்திற்கு” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அப்பிரிவில் “1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்” என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, “விடயத்திற்கேற்ப 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அல்லது 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அல்லது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளில், “1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(2) அதன் (5) ஆம் உட்பிரிவில், “உள்ளூராட்சிச் சேவையின்” மற்றும் “உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையின்” என்னும் சொற்கள் அப்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக முறையே, “மாகாண பகிரங்க சேவையின் ” மற்றும் “மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவின்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு அப்பிரிவில் "அபிவிருத்திச் சபை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கம் செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையைத் திருத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வட்டவணையை இரண்டாம் அட்டவணையாக மீளவிலக்கமிடுவதன் மூலமும் .

(2) மீளவிலக்கமிடப்பட்ட இரண்டாம் அட்டவணைக்கு நேர் முன்னர் பின்வரும் புதிய அட்டவணையை உட்புகுத்துவதன் மூலமும் :

"**முதலாம் அட்டவணை**

(அ) 1981 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின் 17அ என்னும் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் கிராமோதய சபை ;

(ஆ) 1995 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, இலங்கை சமுர்த்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட சமுர்த்தி படையணியொன்று ;

(இ) 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்று ;

(ஈ) 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் கமநல சேவைகள் ஆணையாளரால் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளின் கழகமொன்று ;

(உ) 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, தேசிய இளைஞர் சேவைகள் சட்டத்தின்கீழ் தேசிய இளைஞர் சேவைகள் பேரவையுடன் இணைக்கப்பட்டுள்ள இளைஞர் கழகமொன்று ; அத்துடன்

(ஊ) அத்தகைய பதிவுக்கென அல்லது அங்கீகாரத்திற்கென அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டமொன்றின் கீழ் ஏதேனும் அமைச்சினால், அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது வேறு அரசாங்க முகவராண்மையால் பதிவு செய்யப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு, கழகம் அல்லது குழுமம் ஒவ்வொன்றும் ”.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்